<u>முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>

**முன்னிலை : திருமதி. ஜெ. மோகனா, எம்.எல்.,**
**முதன்மை சார்பு நீதிபதி, காஞ்சிபுரம்**

2026ம் ஆண்டு ஜூலை மாதம் 04-ம் நாள் சனிக்கிழமை

<u>அமர்வு வழக்கு எண். 57/2024</u>

<u>CNR.No.TNKP23-600800-2024</u>

| | |
|---|---|
| அரசுக்காக | காவல் ஆய்வாளர்,<br>மாகரல் காவல் நிலையம் |
| எதிரியின் பெயர்கள் | பெருமாள் (எ) புல்லட் பெருமாள் |
| <u>எதிரி மீதான குற்றம்</u> | கடந்த 15.05.2020ம் ஆம் தேதி பகல் சுமார் 11.45 மணிக்கு B6, மாகரல் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட விச்சாந்தாங்கல் கிராம பாரதி நகர், பிளாட் அருகில் இவ்வழக்கின் சாட்சி 1 பாலாஜி என்பவர் செல்போனில் பேசியவாறு நடந்து சென்று கொண்டிருந்தபோது தலைமறைவு எதிரியான பெருமாள் (எ) புல்லட் பெருமாள் என்பவர் பதிவெண் இல்லாத கருப்பு நிற பல்சர் மோட்டார் சைக்கிளில் சாட்சி 1ஐ இடிப்பது போல வந்து வழிமடக்கி நிறுத்தி சாட்சி 1ஐ பார்த்து "பாக்கெட்டில் எவ்வளவு பணம் வெச்சியிருக்குற எடுடான்னு" கேட்ட போது சாட்சி 1 அவரிடம் பணம் இல்லைனு சொன்னதும் "ங்கோத்தா பணம் வெச்சிகிட்டே இல்லன்ன சொல்றியா" என்று அசிங்கமாக திட்டி தலைமறைவு எதிரி மறைத்து வைத்திருந்த கத்தியை உறுவி சாட்சி 1ஐ இதோட ஒழிந்து போடா என்று சொல்லி கத்தியால் வெட்டிகொலை செய்ய முயற்சி செய்து, பிறகு சாட்சியின் பாக்கெட்டில் இருந்த பணம் ரூ.1000/-த்தை பிடுங்கிக்கொண்டு, "யாராவது என்னை பிடிக்க வந்தீங்கன்னா இந்த கத்தியாலயே வெட்டிடுவேன்" என்று கொலை மிரட்டல் |

| | |
|---|---|
| | விடுத்ததாக எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 341, 294(b), 392, 397, 307, 506(ii) இ.த.ச.வின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளார் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது. |
| எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் | எதிரி மீது சட்டப்பிரிவு 341, 294(b), 392, 397, 307, 506(ii) –இதசவின் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது |
| எதிரிகளின் வாதுரை | குற்றவாளிகள் இல்லை |
| நீதிமன்றத்தின் முடிவு | எதிரி மீது சட்டப்பிரிவு 341, 294(b), 392, 397, 307, 506(ii) இதசவின் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி, எதிரியை மேற்படி பிரிவின் கீழான குற்றச்சாட்டுக்கு குற்றவாளி இல்லை என முடிவு செய்து, எதிரியை குவிமுச பிரிவு 235(1) ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. |
| | இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றப்படவில்லை. |

இந்த வழக்கு என் முன்பாக 30.06.2026ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு. B. ரமேஷ் குமார் அவர்கள் முன்னிலையாகியும் எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. D.நந்தகுமார், A.கிருஷ்ணன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும் ஆவணங்களை பரிசீலித்தும் இதுவரை நிலுவையிலிருந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

### 1. எதிரிகள் மீதான குற்றச்சாட்டு

கடந்த 15.05.2020ம் ஆம் தேதி பகல் சுமார் 11.45 மணிக்கு B6, மாகறல் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட விச்சாந்தாங்கல் கிராம பாரதி நகர் பிளாட்

அருகில் இவ்வழக்கின் சாட்சி 1 பாலாஜி என்பவர் செல்போனில் பேசியவாறு நடந்து சென்று கொண்டிருந்தபோது தலைமறைவு எதிரியான பெருமாள் (எ) புல்லட் பெருமாள் என்பவர் பதிவெண் இல்லாத கருப்பு நிற பல்சர் மோட்டார் சைக்கிளில் சாட்சி 1ஐ இடிப்பது போல வந்து வழிமடக்கி நிறுத்தி சாட்சி 1ஐ பார்த்து "பாக்கெட்டில் எவ்வளவு பணம் வெச்சியிருக்குற எடுடான்னு" கேட்ட போது சாட்சி 1 அவரிடம் பணம் இல்லைனு சொன்னதும் "ங்கோத்தா பணம் வெச்சிகிட்டே இல்லன்ன சொல்றியா" என்று அசிங்கமாக திட்டி தலைமறைவு எதிரி மறைத்து வைத்திருந்த கத்தியை உறுவி சாட்சி 1ஐ இதோட ஒழிந்து போடா என்று சொல்லி கத்தியால் வெட்டிகொலை செய்ய முயற்சி செய்து, பிறகு சாட்சியின் பாக்கெட்டில் இருந்த பணம் ரூ.1000/–த்தை பிடுங்கிக்கொண்டு, "யாராவது என்னை பிடிக்க வந்தீங்கன்னா இந்த கத்தியாலயே வெட்டிடுவேன்" என்று கொலை மிரட்டல் விடுத்ததாக எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 341, 294(b), 392, 397, 307, 506(ii) இ.த.ச.வின் கீழ் மாகறல் காவல் நிலைய ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கானது காஞ்சிபுரம் நீதித்துறை நடுவர் நீதிமன்ற–IIல் பிஆர்சி. எண். 52/2023 ஆக 13.09.2023ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு கு.வி.மு.ச 207 பிரிவின் கீழ் வழங்க வேண்டிய ஆவணங்களை வழங்கிய பின்னர், இந்த வழக்கு அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்கது என்பதால் இந்த வழக்கு குவிமுச பிரிவு 209(அ)ன் கீழ் காஞ்சிபுரம் அமர்வு நீதிமன்றத்திற்கு சமர்பிக்கப்பட்டு, அங்கு SC 57/2024 ஆக கோப்பிற்கு எடுத்து, அதன் பின் விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு வரப்பெற்றது.

3. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தையும் நன்கு பரிசீலனை செய்தும், அரசுத்தரப்பு வழக்கறிஞர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர்

வாதம் கேட்டறிந்த பின்னர், எதிரி மீது சட்டப்பிரிவு 341, 294(b), 392, 397, 307, 506(ii) இதசவின் கீழ் குற்றம் புரிந்து இருக்கலாம் என்று அனுமானிக்க முகநோக்கு ஆதாரங்கள் இருப்பதாக நீதிமன்றம் கருதி எதிரி மீது மேற்கண்ட குற்றச்சாட்டின் கீழ் எழுத்துமூலமான குற்றச்சாட்டு வனைந்து தமிழில் விளக்கி கூறி வினவிய போது, எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று மறுத்து சாட்சிகள் விசாரணை செய்யப்பட வேண்டும் என்று கூறினார்.

4. அதன் பேரில் அரசுத் தரப்பு வழக்கை நிரூபிக்கும் முகமாக அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசுத் தரப்பு சான்றுப்பொருட்கள் மற்றும் எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

5. **<u>அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும், சான்றாவணங்களில் இருந்தும் தெரிய வரும் அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு:</u>**

1). அ.சா.1 பாலாஜி அவரது சாட்சியத்தில் அ.சா.ஆ.1 புகாரில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், கையெழுத்து எதற்காக போட்டேன் என்று தெரியாது என்றும் ஆஜர் எதிரியை தனக்கு தெரியாது என்றும் மாகறல் காவல் நிலையத்திற்கு ஒரு வேலையாக சென்ற போது போலிசார் கேட்டுகொண்டதற்கு இணங்க கையெழுத்து போட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 ஆனந்த் அவரது சாட்சியத்தில் அ.சா.1 தன்னுடைய சித்தப்பா என்றும் வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்று ஆஜர் எதிரியை தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3 பாஸ்கர் ஆய்வாளர் அவரது சாட்சியத்தில் காஞ்சி தாலுக்கா காவல் நிலையத்தில் வட்டார காவல் நிலையத்தில் பொறுப்பில் இருந்தபோது பாலாஜி, த/பெ.ஆனந்தன் என்ற

நபர் கொடுத்த அ.சா.ஆ.2 புகாரின் அடிப்படையில் மாகறல் காவல் நிலைய குற்ற எண். 273/2020 பிரிவுகள் 341, 294பி, 392, 397, 307, 506(ii) இதசவின் கீழ் அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து மேல் விசாரணைக்காக தன்னுடைய பார்வைக்கு வைத்தாகவும் சம்பவம் இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் அ.சா.ஆ.4 மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 பார்வை மகஜர் தயார் செய்து சாட்சிகள் பாலாஜி, ஆனந்தன், உமாசங்கர், பெருமாள், ராஜ், ராஜவேலு ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றதாகவும் இவ்வழக்கின் எதிரி காஞ்சிபுரம் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்றதால் அவரை கைது செய்யவில்லை எனவும் விசாரணையை முடித்து எதிரிக்கு எதிராக பிரிவு 341, 294பி, 392, 397, 307, 506(ii) இதசவின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் இவ்வழக்கில் புகார்தாரர் பாலாஜி மற்றும் ஆனந்தன் ஆகிய சாட்சிகள் அவரிடம் 161 வாக்குமூலத்தில் சொல்லியவாறே தான் தன்னுடைய விசாரணையிலும் செல்லியதாகசாட்சியமளித்துள்ளார். இத்துடன் அரசுத் தரப்புச் சாட்சியம் முடிக்கப்பட்டது.

6. அரசு தரப்பு சாட்சி விசாரணை முடிவடைந்ததும், அரசுத் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து இந்த எதிரிக்குப் பாதகமாகத் தோன்றிய சங்கதிகளைப் பற்றி எதிரிகளிடம் கு.வி.மு.ச 313(1)(ஆ) பிரிவின் கீழ் விசாரணை செய்த போது, எதிரிகள் அரசுத்தரப்பு சாட்சி கூறுவது பொய் என்றும், பொய் வழக்குப் போடப்பட்டுள்ளதாகவும், தங்களது தரப்பில் சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்.

7. இந்த வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசுத் தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதாகும்.

**<u>தீர்வு:-</u>**

8. அரசுதரப்பு வழக்கில், இவ்வழக்கின் எதிரி கடந்த 15.05.2020ம் ஆம் தேதி பகல் சுமார் 11.45 மணிக்கு B6, மாகறல் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட விச்சாந்தாங்கல் கிராம பாரதி நகர் பிளாட் அருகில் இவ்வழக்கின் சாட்சி 1 பாலாஜி என்பவர் செல்போனில் பேசியவாறு நடந்து சென்று கொண்டிருந்தபோது தலைமறைவு எதிரியான பெருமாள் (எ) புல்லட் பெருமாள் என்பவர் பதிவெண் இல்லாத கருப்பு நிற பல்சர் மோட்டார் சைக்கிளில் சாட்சி 1ஐ இடிப்பது போல வந்து வழிமடக்கி நிறுத்தி சாட்சி 1ஐ பார்த்து "பாக்கெட்டில் எவ்வளவு பணம் வெச்சியிருக்குற எடுடான்னு" கேட்ட போது சாட்சி 1 அவரிடம் பணம் இல்லைனு சொன்னதும் "ங்கோத்தா பணம் வெச்சிகிட்டே இல்லன்ன சொல்றியா" என்று அசிங்கமாக திட்டி தலைமறைவு எதிரி மறைத்து வைத்திருந்த கத்தியை உறுவி சாட்சி 1ஐ இதோட ஒழிந்து போடா என்று சொல்லி கத்தியால் வெட்டிகொலை செய்ய முயற்சி செய்து, பிறகு சாட்சியின் பாக்கெட்டில் இருந்த பணம் ரூ.1000/-த்தை பிடுங்கிக்கொண்டு, "யாராவது என்னை பிடிக்க வந்தீங்கன்னா இந்த கத்தியாலயே வெட்டிடுவேன்" என்று கொலை மிரட்டல் விடுத்ததாக எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 341, 294(b), 392, 397, 307, 506(ii) இ.த.ச.வின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9. அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசுத் தரப்பு சான்றுப்பொருட்கள் மற்றும் எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

10. இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் முறையாக நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா

என்று பரிசீலிக்கையில், அரசுத் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சாட்சிகளில் அ.சா.1 புகார்தாரர் புகாரில் உள்ள கையெழுத்து மட்டும் தன்னுடையது என்றும் ஆஜர் எதிரியை தனக்கு தெரியாது என்றும் போலிசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளதால் இந்த வழக்கில் புகார் யாரால் எப்பொழுது, எதற்காக, எந்த இடத்தில் வைத்து கொடுக்கப்பட்டது என்பதற்கு போதுமான சாட்சியம் இல்லை என்பதாலும் கண்ணுற்ற சாட்சியாக தாக்கல் செய்யப்பட்டுள்ள அ.சா.2ம் அரசுத் தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத காரணத்தினாலும் இவ்வழக்கில் விசாரணை அதிகாரியான அ.சா.3 காவல் ஆய்வாளர் அவர்களின் சாட்சியத்தை மட்டுமே அடிப்படையாக கொண்டு எதிரி மீதான குற்றச்சாட்டு அரசுத் தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக நீதிமன்றம் முடிவு செய்ய இயலாது என்று தீர்மானித்து அந்த சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து உத்தரவிடப்படுகிறது.

11. இறுதியாக, மேலே விவாதிக்கப்பட்ட காரணங்களின் அடிப்படையில் வழக்கை பரிசீலிக்கின்ற போது அரசு தரப்பில் எதிரி மீது 341, 294(b), 392, 397, 307, 506(ii)–ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி, எதிரியை மேற்படி பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுக்களுக்கு குற்றவாளி இல்லை என முடிவு செய்து, எதிரிகளை குவிமுச பிரிவு 235 (1) ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

12. இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றப்படவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால்

பிழைகள் நீக்கப்பட்டு, இன்று 2026–ம் வருடம் ஜூலை மாதம் 04–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது

MOHANA
Digitally signed by MOHANA
Date: 2026.07.04 18:42:03 +0530

முதன்மை உதவி அமர்வு நீதிபதி,
காஞ்சிபுரம்.

**<u>அரசு தரப்பு சாட்சிகள்:</u>**

அ.சா.1 பாலாஜி

அ.சா.2 ஆனந்த்

அ.சா.3 திரு.பாஸ்கர், (காவல்ஆய்வாளர்),

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:</u>**

அ.சா.ஆ.1 – புகாரில் உள்ள கையெழுத்து

அ.சா.ஆ.2 – புகார்

அ.சா.ஆ.3 – முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.4 – மாதிரி வரைபடம்

அ.சா.ஆ.5 – பார்வை மகஜர்

**<u>எதிரிகள் தரப்பு சாட்சி, சான்றாவணம்:</u>** இல்லை.

1) வழக்கு முடிவு குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
2) சொத்துப் பற்றிய உத்தரவு உரிய பதிவேட்டில் பதியப்பட்டது.

MOHANA
Digitally signed by MOHANA
Date: 2026.07.04 18:42:09 +0530

முதன்மை உதவி அமர்வு நீதிபதி,
காஞ்சிபுரம்.